யாழ்ப்பாணம்

# கடல்வலய தடையை எதிர்த்து சிங்கள மீனவர் போர்க்கொடி!

விலை ரூபா 5-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 35 திருவள்ளுவர் ஆண்டு 2025 தை 26 இதழ் 357
யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 8-2-1994

(கொழும்பு)
காலிமுகத்திடல் பகுதியைச் சுற்றியுள்ள கடல் பிராந்தியம் தடைசெய்யப்பட்ட பகுதியாக அரசு செய்த பிரகடனத்தை சிங்கள மீனவர்கள் கடுமையாக எதிர்த்துள்ளனர். மேற்படிப் பிரதேசம் தடை செய்யப்பட்டதால் தமது மீன்பிடித்தொழில் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், இதனால் பல மீனவகுடும்பங்கள் தமது தொழிலைக் கை [illegible]

(4-ம் பக்கம் பார்க்க)

## கிழக்கில் தேர்தல் அட்டூழியங்கள்
### மேர்ஜ் தகவல்

(கொழும்பு)
கிழக்கில் பல பகுதிகளில் இராணுவத்தினரால் தமிழ் மக்கள் சுற்றிவளைக்கப்பட்டனர். அங்கு கைதானவர்களிடம் இருந்து பலவந்தமாகக் கையொப்பம் பெறப்பட்டு, வேட்பாளர்கள் தெரிவு செய்யப்பட்டனர். இவ்வாறு

(4-ம் பக்கம் பார்க்க)

# ★ புலிகளுக்கும் அரசுக்கும் இடையிலான — பேச்சுக்கு மத்தியஸ்தம் வகிக்க கத்தோலிக்க திருச்சபை தயார்!

## நிபந்தனையின்றிப் பேச அரசு ஆலோசனை!!

(கொழும்பு)
விடுதலைப்புலிகளுக்கும் அரசுக்குமிடையில் சமாதானப் பேச்சுக்கள் நடைபெறுவதற்கு தாம் மத்தியஸ்தம் வகிப்பதற்கு தயாராக இருப்பதாக கத்தோலிக்கத் திருச்சபையின் கொழும்பு தலைமைப்பீடம் அறிவித்துள்ளது.

இதேவேளை விடுதலைப்புலிகளுடன் நிபந்தனையற்ற பேச்சுவார்த்தை நடத்த அரசு ஆராய்ந்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

(4-ம் பக்கம் பார்க்க)

### தமிழகத்திலிருந்து
## 513 இல. தமிழ் அகதிகள்
### நேற்று தலைமன்னார் வந்தனர்

(கொழும்பு)
தமிழகத்திலிருந்து 513 இலங்கை தமிழ் அகதிகள் நேற்றுக்காலை இராமானுஜம் கப்பலில் தலைமன்னார் வந்து சேர்ந்தனர். இவர்களுடன் சேர்த்து இலங்கை வந்துள்ள நான்காம் தொகுதி அகதிகளின் எண்ணிக்கை 2030 என்று தெரிவிக்கப்படுகிறது.

(4-ம் பக்கம் பார்க்க)

## போரின் மூலகாரணத்துக்கு தீர்வு காண்பதே முக்கியம்
### அமெரிக்க குழு அறிக்கை

(யாழ்ப்பாணம்)
விடுதலைப் புலிகளுக்கும் அரசுக்குமிடையில் நடைபெறும் யுத்தத்தின் மூலகாரணத்துக்கு தீர்வு காணப்படுவதன் மூலமே இலங்கையின் இனப் பிரச்சினைக்கு முடிவுகாணமுடியும்.

இவ்வாறு அகதிகளுக்கான அமெரிக்க குழு வெளியிட்டுள்ள அதன் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது. இக்குழு தனது அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது!

தமிழெண்ணத்துடன் பேச்சு

(4-ம் பக்கம் பார்க்க)

## ● மேற்கு நாட்டு அதிகாரிகள் அகதிகளை பார்வையிட்டனர்

(கொழும்பு)
தலைமன்னாருக்கு நேற்று வந்த 513 இலங்கை தமிழ் அகதிகளை சுவிற்சர்லாந்தின் உயர் ஸ்தானிகர், ஜேர்மன் தூதரக ஆலோசகர், கனேடிய உயர் ஸ்தானிகராலயத்தின் முதற்செயலர், அகதிகளுக்கான உயர் ஸ்தானிக

(4-ம் பக்கம் பார்க்க)

## அகதிகளுக்கு சர்வதேச ஆதரவு கிடைக்க வேண்டும்

(வாஷிங்டன்)
இந்தியாவிலிருந்து இலங்கை திரும்பும் அகதிகளுக்கு சர்வதேச ஆதரவை தொடர்ந்தும் வழங்க வேண்டியதன் அவசியத்தை அமெரிக்க அகதிகள் குழு பரிந்துரைத்துள்ளது.

இந்தியாவிலுள்ள இலங்கை அகதிகளுக்கு குறிப்பாக அகதி

(4-ம் பக்கம் பார்க்க)

## ● தமிழ் மக்கள் மீதான கண்மூடித்தனமான குண்டுத் தாக்கு நிறுத்தப்படவேண்டும்
### — ஆயர் கென்னத் பெர்னாண்டோ

(யாழ்ப்பாணம்)
தமிழ்மக்களின் குடிமனைகள், ஆலயங்கள் மற்றும் பொது இடங்கள் ஆகியவற்றின் மீது கண்மூடித்தனமாக மேற்கொள்ளப்படும் விமானக்குண்டுத்தாக்குதல் நிறுத்தப்பட வேண்டுமென யாழ். வந்துள்ள அங்கிலிக்கன் ஆயர் அதி வணக்கத்துக்குரிய கென்னத்பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

இத்தகைய குண்டு வீச்சுக்கள் மூலம் அப்பாவி பொதுமக்களே பாதிக்கப்பட்டுள்ளனர் என்பதை தாம் ஏற்றுக்கொள்வதாகவும் மக்களுடைய பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

தென்பகுதியில் பெரும்பான்மையான சிங்கள மக்களும்,

(4ம் பக்கம் பார்க்க)

## நாடு திரும்புமாறு இந்திய அதிகாரிகள் வற்புறுத்து

(லண்டன்)
நாம் நாடு திரும்புவதற்கு சம்மதம் தெரிவிக்கும் வகையில் இந்திய அதிகாரிகள் தம்மை நிர்ப்பந்தம் செய்ததாக நேற்று தலைமன்னார் வந்துசேர்ந்த தமிழ் அகதி

(4ம் பக்கம் பார்க்க)

## பிரேமச்சந்திரா நியமனத்தை நீதிமன்றம் இடைநிறுத்தம்

(கொழும்பு)
ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் தலைவராக திரு. ஜி. எம். பிரேமச்சந்திரனை நியமிக்கும் முன்னணியின் நிர்வாகக் குழு முடிவை கொழும்பு மாவட்ட நீதிமன்றம் இடைநிறுத்தி வைத்துள்ளது.

(4-ம் பக்கம் பார்க்க)

## ● இலங்கை இனப் பிரச்சினையால் கொள்ளை லாபம் பெறுவது ஆயுதஉற்பத்தியாளரே - ஆரியரத்ன

(யாழ்ப்பாணம்)
எமது நாட்டில் தற்பொழுது ஏற்பட்டிருக்கும் இரு இனங்களுக்கான பிரச்சினை காரணமாக வெடிமருந்துவகைகள் துப்பாக்கிகள், துப்பாக்கி ரவைகள் உற்பத்தியாளர்களுக்கு நல்ல வருமானம் கிடைத்துவருகிறது.

நான் ஒரு அரசியல்வாதி அல்ல. ஆனால் எமது இனங்களுக்கிடையில் ஏற்பட்டுள்ள பிரச்சினையை முடிவுக்குக் கொண்டுவருவதற்கு என்னு

(4-ம் பக்கம் பார்க்க)

## இன்று மடுக்சேவை நடைபெறும்

(யாழ்ப்பாணம்)
கிளாலி - பூநகரி படகுச் சேவை இன்று வழமையான நேரத்திற்கு நடைபெறும் என விடுதலைப்புலிகளின் அரசியல் துறையினர் அறிவித்துள்ளனர்.

# வட-கிழக்கு மாகாணசபையின் புனர்வாழ்வு பிரிவு மூடப்படும்?

(யாழ்ப்பாணம்)

வடக்கு - கிழக்கு மாகாண சபையின் இதுவரை காலமும் இயங்கிவந்த புனர்வாழ்வு அமைச்சின் பிரிவு மூடப்படும் நிலை ஏற்பட்டுள்ளதாக தெரிய வருகிறது.

வடக்கு கிழக்குப் பகுதிகளின் அபிவிருத்தி வேலைத் திட்டங்களுக்குத் தேவைப்படும் பணத்துக்கு இனிமேல் மத்திய அரசிடமே நேரடியாக விண்ணப்பிக்கும்படி புனர்வாழ்வு அமைச்சு மேற்படி பகுதிகளில் உள்ள அனைத்து செயலகங்களுக்கும் அறிவித்துள்ளது.

இதுவரை காலமும் வடக்கு கிழக்குப் பகுதிகளின் அபிவிருத்தி வேலைத் திட்டங்களுக்கு வடக்கு கிழக்கு மாகாணசபையின் புனர்வாழ்வுப் பிரிவே தேவைப்படும் பணத்தை வழங்கி வந்தது.

இதேவேளையில் யாழ். மாவட்டத்தில் கடந்த வருடங்களில் ஆரம்பிக்கப்பட்ட அபிவிருத்தி வேலைத்திட்டங்களுக்கு இன்னும் மூன்று கோடி ரூபாவை புனர்வாழ்வு அமைச்சு எதிர்வரும் ஆனி மாதத்துக்கு முன்பாக அனுப்பிவைக்க வேண்டும் எனவும் இல்லாவிட்டால் இத்திட்டங்கள் கைவிடப்பட்டு விடும் என்றும் யாழ். செயலக அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

இத்திட்டங்களுக்கு வழங்கப்பட வேண்டியுள்ள மீதிப் பணம் சம்பந்தமாகவும் நிவாரணப் பொருட்கள் யாழ். மாவட்டத்துக்கு அனுப்பி வைக்கப்படாதது தொடர்பான கணக்குகளை பரிசீலனை செய்வதற்காகவும் யாழ். செயலக அதிகாரி ஒருவர் தற்போது கொழும்பு சென்றிருப்பதாகவும் அறியவருகிறது.

(வி-இ)

## அரச ஊழியர்களுக்கு எரிபொருள் வழங்குவதில் பாகுபாடு

(யாழ்ப்பாணம்)

அரசினால் அரச ஊழியர்களுக்கென சலுகை அடிப்படையில் வழங்கப்படுகின்ற எரிபொருள் பங்கீட்டில் பாகுபாடு காண்பிக்கப்படுவதால் பாதிக்கப்பட்ட ஊழியர்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

குறிப்பிட்ட அரச அமைப்பு ஒன்றைச் சேர்ந்த ஊழியர்களுக்கு வழங்கப்படும் பெற்றோல் பங்கீட்டிலேயே இப்பாகுபாடு காண்பிக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

குறிக்கப்பட்ட ஒருபிரிவினருக்குமாத்திரம் வழங்கப்பட்டு வந்த பெற்றோல் இம்முறை நிர்வாகம் வைத்திருக்கின்ற அனைத்து ஊழியர்களுக்கும் வழங்குவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட போதிலும், பெற்றோல் வழங்குவதில் நடுநிலை ஊழியர்களும் சிற்றூழியர்களும் இந்த அரசு அமைப்பில் புறக்கணிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதுபற்றி இவ்வூழியர்கள் நிர்வாகத்திடம் கேட்டபோது இவர்களுக்கு பெற்றோல் வழங்கப்படமாட்டாது என நிர்வாகத்தால் கூறப்படுகிறது.

இதேபோல் சைக்கிள் வழங்குவதிலும் இப்பாகுபாடு காண்பிக்கப்படுகிறது. (இ)

## ஆரியரத்ன குழு செயலகத்தைப் பார்வையிட்டது

(மானிப்பாய்)

யாழ். வந்துள்ள சர்வோதய இயக்கத் தலைவர் திரு. ஆரியரத்னவும் மற்றும் குழுவினரும் விமானக்குண்டு வீச்சினால் சேதமுற்ற யாழ் செயலகத்தை நேற்றுக்காலை பார்வையிட்டு, சேதம் சம்பந்தமான புகைப்படங்களையும் எடுத்துச் சென்றனர். 71-இ

## மணலாறு பகுதியில் தொடர் விமானத் தாக்கு

(முல்லைத்தீவு)

மணலாறுப் பகுதியில் தொடர்ச்சியான விமானத் தாக்குதல் நடத்தப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த இரண்டு மாதங்களில் மட்டும் ஆறு தடவைகள் அங்கு விமானத் தாக்குதல் நடாத்தப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

பாடசாலைகள் மற்றும் மக்கள் குடியிருப்புக்கள் மீது மேற்கொள்ளப்படும் இத்தாக்குதல்களினால், இப்பகுதி மாணவர்கள் பாடசாலைகளுக்குச் செல்வதற்குப் பெரிதும் தயக்கம் காட்டுகின்றனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது. க-இ

## இன்று தபால் விநியோகம்

(அச்சுவேலி)

நேற்றுமாலை யாழ். தபால் நிலையத்திற்கு மாங்குளத்திலிருந்து கொண்டுவரப்பட்ட 291 தபால் பொதிகளும் நேற்றே தரம் பிரிக்கப்பட்டன. இன்று தொடக்கம் தபால் விநியோகம் நடைபெறவுள்ளதாக தெரியவருகின்றது.

(இ-59)

## கேரள பஸ் விபத்தில் 40 பேர் பலி

(புதுடில்லி)

கேரள மாநிலத்தில் கடந்த சனிக்கிழமை இரவு பிரயாணிகள் பஸ்வண்டி ஒன்றும், லொறி வண்டி ஒன்றும் மோதிக்கொண்டதில் 40 பேர் அதே இடத்தில் பலியானதாகவும் நூற்றுக்கணக்கானோர் படுகாயம் அடைந்ததாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்த விபத்து ஏற்பட்டதும் இருவாகனங்களும் உடனே தீ பற்றிக்கொண்டதினால் அனேகமானோர் தீயில் சிக்குண்டு பலியானதாக பொலிஸார் தெரிவித்தனர்.

(வி-இ)

## விண்ணப்ப திகதி நீடிப்பு

(யாழ்ப்பாணம்)

1993க்குரிய கணக்காய்வு பரீட்சகர் தரம் IIற்கு நியமனம் செய்வதற்கான விண்ணப்பங்களை பெற்றுக்கொள்வதற்கான இறுதித் திகதி 1994 பெப்ரவரி 18ந் திகதிக்கு நீடிக்கப் பட்டுள்ளது.

மேற்படி பரீட்சைக்கான விண்ணப்பங்களை அனுப்பத் தவறியவர்கள் எதிர்வரும் 15-ம் திகதியன்று அல்லது அதற்கு முன் விண்ணப்பங்களை பரீட்சை ஆணையாளருக்கு விளாசமிட்டு அரச அதிபரிடம் ஒப்படைக்கும்படி வேண்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

இப்பரீட்சை பரீட்சை ஆணையாளரால் மீள அட்டவணைப்படுத்தி உள்ளவாறு எதிர்வரும் ஏப்ரல் 02ந் திகதி தொடக்கம் கொழும்பில் நடைபெறவுள்ளது என கணக்காய்வாளர் தலைமை அதிபதி யாழ்ப்பாண அரசாங்க அதிபருக்கு அறிவித்துள்ளார்.

(162-இ)

0 0

(யாழ்ப்பாணம்)

கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர், தையல் பயிற்சிப் போதனாசிரியர் பதவிகளுக்கான விண்ணப்ப முடிவுத் திகதி, 10-02-94 வரை நீடிக்கப்பட்டுள்ளது.

இதற்கான பரீட்சைக் கட்டணத்தை, யாழ். பிரதேசச் செயலகத்தில் செலுத்தி பற்றுச் சீட்டைப் பெற்றுக் கொள்ளலாம். 162-இ

## விண்ணப்ப திகதி பிற்போடப்பட்டது

(யாழ்ப்பாணம்)

சுகாதார, மகளிர் விவகார அமைச்சில் பயிற்சிக்காகச் சுற்றும் நிலைத் தாதிகளை ஆட்சேர்ப்பதற்கான போட்டிப் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி பின்போடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

1993-08-06ம் திகதி வெளியான வர்த்தமானியில் தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்தில், விண்ணப்பங்களை பரீட்சை ஆணையாளருக்கு அனுப்பி வைக்கும்படி விண்ணப்பதாரர்கள் கேட்டுக்கொள்ளப்படுவதாக யாழ்ப்பாண அரசாங்க அதிபர் தெரிவித்துள்ளார்.

இதற்கான வர்த்தமானி அறிவித்தலை 'ஈழநாடு' காரியாலயத்தில் பார்வையிடலாம்

## அகதிகளுக்கு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

களுக்கான உயர் ஸ்தானிகராலயத்தின் முழு ஈடுபாட்டுடன் உதவி வழங்குவது, மற்றும் பாதுகாப்பு வழங்குவது ஆகியவற்றை அமெரிக்காவும், சர்வதேச சமூகமும் ஊக்குவிக்க வேண்டும் என இந்தஅமைப்பு வலியுறுத்தியுள்ளது. —க-இ

## இலங்கை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கான சகல ஒத்துழைப்பும் வழங்குவேன்.

யாழ். மாவட்ட சர்வோதய பணிமனையில் நேற்றுப்பிற்பகல் சர்வோதய ஊழியர்கள் மத்தியில் உரையாற்றுகையில் அகில இலங்கை சர்வோதய அமைப்பின் தலைவர் கலாநிதி ஆரியரத்ன இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்து பேசிய அவர் கூறியதாவது:

இனப்பிரச்சனைக்கு ஒரு நல்ல முடிவை ஏற்படுத்துவதற்காக முயற்சிப்பேன்.

காலஞ்சென்ற ஜனாதிபதி பிரேமதாஸாவின் காலத்தில் விஷமத்தனமான பிரசாரங்களால் எமக்குக் கிடைத்து வந்த வெளிநாட்டு உதவிகளில் தடங்கல்கள் ஏற்பட்டன. இதன் காரணமாக எமது அமைப்பின் செயற்பாடுகளை தற்காலிகமாக நிறுத்த வேண்டியநிலை ஏற்பட்டது.

எமது செயற்பாடுகள் வடக்கும் கிழக்கில் மட்டுமல்லாது தெற்கிலும் நடைபெறவில்லை. இனிமேல் எமது செயற்பாடுகளை இங்கிருந்து ஆரம்பிக்கவுள்ளோம்.

எதுவித முன் ஏற்பாடுகள் இல்லாமல் திடீரென எமது யாழ்ப்பாணம் விஜயத்தை மேற்கொண்டோம். எம்மை இங்கு நாம் எதிர்பார்த்ததிலும் பார்க்க கூடுதலான மக்கள் வரவேற்றார்கள். இங்குள்ள மக்களின் கஷ்டங்களைப் புரிந்து கொண்டோம். இவற்றை நாம் அரசுக்கு எடுத்துக்கூறுவோம் என்றார்.

162-இ

## தமிழகத்திலிருந்து

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இராமேஸ்வரத்திலிருந்து தலைமன்னாருக்கு வந்த இவ் அகதிகள் அனைவரும் மன்னார் பகுதிகளைச் சேர்ந்தவர்கள் ஆவர்.

அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகராலயத்தின் அனுசரணையுடன் இவர்கள் இலங்கைக்கு அழைத்துவரப்பட்டுள்ளனர்.

மேலும் 500பேரைக் கொண்ட மேலும் மூன்று தொகுதி அகதிகள் எதிர்வரும் 17ம் திகதியளவில் இலங்கை வந்து சேர்வார்கள் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (க-இ)

## புலிகளுக்கும்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

அண்மையில் யாழ். நகருக்கு வந்து, விடுதலைப் புலிகளின் பிரமுகர்களுடன் பேச்சுக்கள் நடாத்திய கொழும்பு பேராயர் நிக்கிலஸ் மார்க்கஸ் பெர்னாண்டோ குழுவினர் கொழும்பு திரும்பியது தெரிந்ததே.

இதனையடுத்து கத்தோலிக்க திருச்சபையின் தலைமைப்பீடம் விடுதலைப்புலிகளுக்கும் அரசுக்குமிடையில் நிபந்தனையற்ற சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்கு மத்தியஸ்தம் வகிக்கத் தயாராக இருப்பதாக அறிவித்துள்ளது.

இதேவேளையில் ஆயுதத்தை களையும் வரை விடுதலைப் புலிகளுடன் எந்த விதமான பேச்சுவார்த்தைகளையும் வைத்துக்கொள்ளமாட்டோம் என்று இதுவரை கூறிவந்த அரசு தற்போது விடுதலைப் புலிகளுடன் நிபந்தனையற்ற முறையில் பேச்சுவார்த்தைகளை நடாத்துவதற்கு ஆலோசனை நடத்தி வருவதாக கொழும்பில் வெளியாகும் ஆங்கிலப் பத்திரிகை ஒன்று நேற்று செய்தி வெளியிட்டுள்ளதாகவும் வெரித்தாஸ் வானொலி தெரிவித்தது.

(வி-இ)

## கடல் வலய

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

விடும் நிலையில் இருப்பதாகவும் ஆகவே இத்தடையை உடனடியாக ரத்துச் செய்யும்படி பெருமளவு சிங்கள மீனவர்கள் கடற்றொழில் அமைச்சருக்கு முறைப்பாடுகளை அனுப்பி வைத்துள்ளனர்.

இதுசம்பந்தமாக நேற்று கடற்றொழில் அமைச்சர் ஜோசப் மைக்கல் பெரேரா, பாதுகாப்பு அமைச்சின் அதிகாரிகளுடனும் முப்படை அதிகாரிகளுடனும் அவசரக் கூட்டம் ஒன்றை நடாத்தி இது குறித்து ஆராய்ந்ததாக செய்திகள் தெரிவிக்கின்றன.

(வி-இ)

## போரின்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வார்த்தைகள் நடைபெறுவதற்கு சாதகமாக எதிர்காலத்தில் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டால் அதை இருபகுதியினரும் பயன்படுத்த வேண்டும்.

விடுதலைப் புலிகளுக்கும் இராணுவத்துக்குமிடையில் நீண்டகாலமாக நடைபெற்று வரும் யுத்தத்துக்கு தீர்வு காணும் முகமாக பலதடவைகள், ஆக்கபூர்வமான பேச்சுவார்த்தைகள் நடைபெறக் கூடிய சூழ்நிலை ஏற்பட்ட போது சாதகமான முறையில் அது பயன்படுத்தப்படவில்லையெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(வி-இ)

## கிழக்கில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவு செய்யப்படுபவர்களின் கையொப்பம் இடத் தெரியாதவர்களும் இடம்பெறுவர் எனக் கொழும்பில் இருந்து வெளிவரும் 'மேர்ஜ்' அமைப்பின் சஞ்சிகை தெரிவித்துள்ளது.

அச்சஞ்சிகையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இப்பகுதிகளில் உள்ளூராட்சித் தேர்தலுக்கான வேட்பாளர்களை நியமிப்பதில் அனைத்துக் கட்சிகளும் வன்முறையைப் பிரயோகிப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கிழக்கில் தேர்தலை நடத்தி, மட்டக்களப்பும் தனது கட்டுப்பாட்டில் இருப்பதாக வெளி உலகிற்கு நிரூபிப்பதிலேயே அரசாங்கம் குறியாக உள்ளதாகவும், இதற்காக இராணுவப் பலம் முழுமையாக அங்கு பயன்படுத்தப்படுவதாகவும் தெரிவித்துள்ளது. க-இ

## பூநகரி சமர்: ஒளிப்பதிவு நாடா வெளிவருகிறது

(யாழ்ப்பாணம்)

விடுதலைப்புலிகளால் "ஒப்பரேசன் தவளை" எனப் பெயர் சூட்டப்பட்டு நடாத்தப்பட்ட பூநகரிச் சமரின் வீடியோ நாடா எதிர்வரும் 15ம் திகதி வெளியாகவுள்ளது என விடுதலைப்புலிகளின் நிதர்சனம் அறிவித்துள்ளது.

## நாடு திரும்புமாறு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஒருவர் தெரிவித்துள்ளார்.

பி. பி. ஸி. க்கு அவர் அண்மையில் வழங்கிய பேட்டியிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். (க)

## தீவக அகதிகள்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

போட்ட கொட்டகைகளை அகற்றி ஒவ்வொரு குடும்பத்திற்கும் தனித்தனி குடிசைகளை அமைத்து வழங்குவதே ஒரே வழி என குடியிருப்புவாசிகள் கூறுகின்றனர். 101-இ

## தமிழ் மக்கள்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மதத்தலைவர்களும் சமாதானத்தையே விரும்புவதாகவும் தம்மை அடிக்கடி சந்திக்கும் இவர்கள் சமாதானத்திற்கான சூழலை தோற்றுவிக்க முயற்சி மேற்கொள்ளுமாறு தம்மை வற்புறுத்தி வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

(க-இ)

## மேற்கு நாட்டு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ராலய வதிவிட பிரதிநிதி றசீம் உர்கான் ஆகியோர் நேரில் சென்று பார்வையிட்டனர்.

அகதிகளின் நலன்கள் மற்றும் அவர்களின் எதிர்கால முயற்சிகள் குறித்தும் இக்குழுவினர் நேரடியாக ஆராய்ந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

-க-இ

## பிரேமச்சந்திர

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கடந்த 24ம் திகதி கூடிய ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் நிர்வாகக் குழு தற்போது முதலமைச்சராக உள்ள திரு. பிரேமச்சந்திராவை முன்னணியின் தலைவராக நியமிப்பதென முடிவு செய்தது.

ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் முன்னாள் தலைவர்களில் ஒருவரான திரு. காமினி திசநாயக்கா, ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்ததை அடுத்தே இந்த முடிவு எடுக்கப்பட்டது. -இ

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1994ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 8-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News paper at the General Post office Sri Lanka under Licence Number B/10336/B